**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,பேரையூர்.**

**முன்னிலை: திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2020ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை**

**சி.ஆர்.எம்.பி.எண்.901/ 2020**

-------

பவுன்ராஜ் (65/2020)
த/பெ. பெரியசாமி,
செல்லம்மாள் நகர்,
பேரையூர். ... மனுதாரர்/எதிரி

- எதிர்-

அரசுக்காக - சார்பு ஆய்வாளர்,
பேரையூர் காவல் நிலையம்,
குற்ற எண். 2739/2020 ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

எதிரிக்கு பிணை வழங்க வேண்டுமென கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழ் எதிரி தரப்பில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்/எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் : திரு.கே.சிவக்குமார்,திரு.பழனிக்குமார், செல்வி.ஜே.கிருஷ்ணவேணி

எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் : திரு.எஸ்.ஜவஹர்லால் நேரு - அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை ஒன்று

## <u>உத்தரவு</u>

### 1. மனுவின் சுருக்கம்

எதிரியின் மீது இதசபிரிவுகள் 294(பி),324,506(2)ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரி கடந்த 8.9.2020ம் தேதியிலிருந்து சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரி எவ்வித குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை எனவும், எதிரி சட்டத்தை மதித்து நடக்கக் கூடியவர்கள் எனவும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் உரிய பிணைமுறியினை தாக்கல் செய்ய தயாராக உள்ளார்கள் எனவும், எதிரி இம்மனுவிற்காக வேறெந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை எனவும், எனவே எதிரியை பிணையில் விடுவிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. அரசு தரப்பு பதிலுரையின் சுருக்கம் :

அரசு தரப்பில் எதிரியை பிணையில் விட்டால் ஓடிச்சென்று தலைமறைவு ஆகிவிடுவார் என்பதாலும், இன்னும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், இவ்வழக்கின் சாட்சிகளை மிரட்டி கலைக்கவோ, மிரட்டவோ கூடும் என்பதாலும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு எதிரியை கைது செய்ய

வேண்டியிருப்பதாலும், மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், மேலும் இதனால் நீதிமன்ற விசாரணை பாதிக்கப்படும் என்பதாலும், மேற்படி எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

**3**. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 3 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். காயம்பட்ட நபர் சிகிச்சையில் இருந்து வெளியேறியுள்ளார். எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். எதிரி சாட்சியை கலைக்கவோ, மிரட்டவோ கூடாது. எதிரிக்கு முன் வழக்குகள் எதுவும் உள்ளதாக புலன் விசாரணை அதிகாரி தெரிவிக்கவில்லை. இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எதிரியை நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுவதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி ரூ.10,000/-க்கு சொந்த பிணைமுறியை சிறை கண்காணிப்பாளர், திருமங்கலம் கிளைச் சிறை அவர்களிடம் பிறப்பித்துக் கொடுத்தல் வேண்டும். எதிரி பிணையில் வந்த மூன்று வார காலத்திற்குள் எதிரி ரூ.10,000/-த்திற்கு தலா இரு நபர்கள் இந்நீதிமன்றத்தில் பிணைமுறி அளிக்க வேண்டும் எனவும், எதிரி சிறையிலிருந்து வெளிவந்த நாளிலிருந்து ஒரு வார காலத்திற்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி கையெழுத்து செய்ய வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் இப்பிணை மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் 2020ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**(ஒ.ம்.)ஈ.முத்துசாமி,பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பேரையூர்.**

<u>நகல்</u>
சிறை கண்காணிப்பாளர்,
கிளைச் சிறை,
திருமங்கலம்.